(ஆறாவது பாராளுமன்றம் - மூன்றாவது கூட்டத்தொடர்)

இல. 78 ]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2009, மாச்சு 19, வியாழக்கிழமை, மு. ப. 9.30 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0551 / ' 08

1.

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) எதிர்காலத்தில் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளினால் (TMVP) கையளிக்கப்பட வேண்டிய ஆயுதங்களின் எண்ணிக்கையுடன் ஒப்பிடுமுகமாக, தமவிபு உறுப்பினர்களின் எண்ணிக்கை மற்றும் அவர்களிடமுள்ள ஆயுதங்களின் எண்ணிக்கை தொடர்பாக தேசிய புலனாய்வு பணியகத்திடமிருந்து (NIB) புலனாய்வு மதிப்பீட்டு அறிக்கையினை அரசாங்கம் பெற்றுள்ளதா என்பதையும்,

(ii) தமவிபு களினால் பயன்படுத்தப்படும் ஆயுதங்களின் பட்டியலினைச் சமர்ப்பிக்குமாறு அவர்களைக் கோரும் எண்ணம் ஏதும் அரசாங்கத்திற்கு உள்ளதா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறியத்தருவாரா?

(ஆ) (i) தமவிபு களினால் பயன்படுத்தப்படும் ஆயுதங்களைக் கலைய அரசாங்கம் எண்ணியுள்ள திகதியினையும்,

(ii) அவ்வாறில்லை எனின், இந்த ஆயுதங்களை, அவற்றைப் பயன்படுத்தும் ஒவ்வொரு உறுப்பினரதும் பெயர்கள்/முகவரிகள் (பாதுகாப்புக் காரணங் களுக்காகப் பெயர்களை வெளியிடாமல் பேணலாம்) என்பதுடன் பதிவு செய்யும் திட்டமொன்று அரசாங்கத்திடம் உள்ளதா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0866 / '08

2.

கௌரவ பேமசிரி மானகே,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) கச்சத்தீவின் பரப்பளவு எவ்வளவு என்பதையும்,

(ii) அந்த தீவின் மொத்த சனத்தொகை எவ்வளவு என்பதையும்,

(iii) அங்குள்ள மீனவர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இந்திய அரசுக்கு அந்த தீவின் மீது உரிமை இல்லை என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) அந்த தீவு தொடர்பாக இந்திய அரசினால் இலங்கை மீது பிரயோகிக்கப்படும் அழுத்தங்கள் எவை என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0986 / '08

3.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— நிதி,திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) சுங்க வெகுமதி நிதியம் மற்றும் சுங்க அதிகாரிகள் முகாமைத்துவ மற்றும் நட்டஈட்டு நிதியம் ஆகியன இயங்குகின்றனவா என்பதையும்,

(ii) அவ்வாறாயின், 2004, 2005, 2006,2007 மற்றும் 2008 ஆம் நிதியாண்டுகளில் சுங்க வெகுமதி நிதியத்திலிருந்து சுங்க அதிகாரிகளுக்கு வழங்கப்பட்ட தொகையினை வெவ்வேறாகவும்,

(iii) மேற்படி ஒவ்வொரு வருடத்திலும் சுங்க வெகுமதி நிதியத்திலிருந்து சுங்க அதிகாரிகள் பெற்றுக்கொண்ட தொகையினையும், அவர்களின் பெயர்களையும்,

(iv) 2004, 2005, 2006, 2007, 2008 லிருந்து இற்றை வரையான நிதி ஆண்டுகளில் சுங்க அதிகாரிகள் முகாமைத்துவம் மற்றும் நட்டஈட்டு நிதியத்திற்கு வைப்புச் செய்யப்பட்ட தொகையினையும்

அவர் இச்சபைக்கு அறியத் தருவாரா?

(ஆ) சுங்க அதிகாரிகள் முகாமைத்துவ மற்றும் நட்டஈட்டு நிதியம் மற்றும் சுங்க வெகுமதி நிதியம் ஆகியவற்றின் கணக்குகள் கணக்காய்வாளர் நாயகத்தினால் கணக்காய்வு செய்யப்பட்டதா என்பதையும் அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1052 / '08

4.

கௌரவ திலகரத்ன வித்தானாச்சி,__ கமத்தொழில் அபிவிருத்தி, கமநல சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—(2)

(அ) (i) "அப்பி வவமு - ரட்ட நகமு" என்ற வேலைத்திட்டத்தின் கீழ் 2006 தொடக்கம் 2008 ஆம் ஆண்டு வரை காலி மாவட்டத்தின் நாகொட பிரதேச செயலக பிரிவில் வீட்டுத்தோட்ட கருத்திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள நிதி எவ்வளவு,

(ii) இக் கருத்திட்டங்களுக்காக கமத்தொழில் அமைச்சினால், மாகாண கமத்தொழில் அமைச்சினால், பன்முகப்படுத்தப்பட்ட நிதியத்தினால் மற்றும் மாகாண சபை உறுப்பினர்களுக்கான நிதியத்தினால் ஒதுக்கப்பட்டுள்ள தொகை எவ்வளவு,

(iii) இதன்படி, 2006 ஆம் ஆண்டிலும் 2008 ஆம் ஆண்டிலும் வீட்டுத்தோட்ட பயிர்ச்செய்கையில் ஈடுபட்டவர்களின் எண்ணிக்கை மற்றும் உரிய காணியின் அளவு வருட வாரியாக எவ்வளவு

என்பதை தனித்தனியாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 2008 ஆம் ஆண்டை விட வீட்டுத்தோட்ட பயிர்ச்செய்கையாளர்களை ஊக்குவிப்பதற்காக 2009 ஆம் ஆண்டின் பொருட்டு திட்டமிடப்பட்டுள்ள வேலைத்திட்டங்கள் யாவை,

(ii) இதன்பொருட்டு மேற்படி பிரதேச செயலகப் பிரிவுக்கு ஒதுக்குவதற்காக எதிர்பார்க்கப்படும் தொகை எவ்வளவு

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1075 / '08

5.

கௌரவ ஜினதாச கிதுலகொட,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,—(2)

(அ) மக்கள் வங்கியிடமிருந்து பெற்ற கடன் தொகைகளைச் செலுத்தாமல் தவறவிடுகின்ற தனியார் நிறுவனங்களும் கம்பனிகளும் உள்ளனவா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) ஆமெனில், மேற்படி தனியார் நிறுவனங்களினதும் கம்பனிகளினதும் பெயர்ப் பட்டியலையும் இவர்கள் செலுத்தவேண்டியுள்ள கடன் நிலுவைகள் தனித் தனியாக எவ்வளவென்பதையும் அவர் இச்சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) இவ்வாறு செலுத்தத்தவறிய கடன் நிலுவைகளை அறவிட ஏற்கெனவே மேற்கொண்டுள்ள மற்றும் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவுள்ள வழிமுறைகள் யாவையென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1123 / '08

6.

கௌரவ வஜிர அபேவர்தன,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) 1994 – 2001 வரையிலான காலக்கட்டத்தில் அரசியல் பழிவாங்கல்களுக்கு இலக்கான கல்வி அமைச்சின் மற்றும் அத்துடன் இணைந்த நிறுவனங்களின் உத்தியோகத்தர்களுக்கு, அதிபர்களுக்கு, ஆசிரியர்களுக்கு மற்றும் ஊழியர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கு தற்போது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்,

(ii) அக்காலக்கட்டத்தில் அவ்வாறு சிபாரிசு செய்து அனுமதி வழங்கப்பட்ட பெயர்களின் மொத்த எண்ணிக்கை யாதென்பதையும்,

(iii) காலி மாவட்டதிதில் அவ்வாறு அனுமதி வழங்கப்பட்டுள்ள எண்ணிக்கை யாதென்பதையும் ,

அவர் இச்சபையில் அறிவிப்பாரா ?

(ஆ) மேற்படி பெயர் பட்டியலை அவர் இச்சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) பழிவாங்கல்கள் கண்காணிப்புக் குழுவின் நேர்முகப் பரீட்சைக்கு காலி மாவட்டத்திலிருந்து சமூகமளித்தவர்களின் எண்ணிக்கை யாதென்பதை அவர் இச்சபையில் தெரிவிப்பாரா ?

(ஈ) மேற்படி கண்காணிப்புக் குழுவினால் பரிந்துரை வழங்கப்பட்ட பலருடைய பெயர்கள் அனுமதி வழங்கப்பட்ட பட்டியலிலிருந்து அகற்றப்பட்டுள்ளன என்பதை அவர் அறிவாரா?

(உ) (i) மேற்படி குழுவினால் பரிந்துரைக்கப்பட்ட பெயர் பட்டியல் காலி மாவட்டத்தின் அரசியல் அதிகாரமுள்ள ஒருவரின் அனுமதிக்காக அனுப்பப்பட்டுள்ளதா என்பதையும்,

(ii) அவ்வாறு பெயர் அகற்றப்பட்டுள்ள அனைவருக்கும் நேர்முகப் பரீட்சையை நடாத்தி அல்லது கண்காணித்து உரிய நிவாரணம் வழங்கப்படுமா என்பதையும்,

(iii) முடியாவிடின் அதற்கான காரணங்கள் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா ?

(ஊ) இன்றேல், ஏன் ?

1151 / '08

7.

கௌரவ லக்ஷ்மன் நிபுணஆரச்சி,— நீர் வழங்கல், வடிகாலமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் குழாய் ஊடாக 2008 ஆகஸ்ட் 31ஆம் திகதியளவில் கொழும்பு மாவட்டத்தில் நீர் வசதிகளைப் பெற்றுக் கொண்டவர்களின் எண்ணிக்கை எவ்வளவு,

(ii) ஒரு நாளில் 24 மணித்தியாலமும் நீர் வழங்கும் தொடர்புகளின் எண்ணிக்கை எவ்வளவு,

(iii) ஒரு நாளில் 16 மணித்தியாலத்துக்குக் குறைவாக நீர் வழங்கும் தொடர்புகளின் எண்ணிக்கை எவ்வளவு,

(iv) ஒரு நாளில் 8 மணித்தியாலத்துக்குக் குறைவாக நீர் வழங்கும் தொடர்புகளின் எண்ணிக்கை எவ்வளவு,

(v) ஒரு நாளில் 2 மணித்தியாலத்துக்குக் குறைவாக நீர் வழங்கும் தொடர்புகளின் எண்ணிக்கை எவ்வளவு

என்பதை அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) ஒரு நாளில் 24 மணித்தியாலமும் நீர் வழங்கப்படாத பாவனையாளர்களின் பொருட்டு மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாதென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1165 / '08

8.

கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே,— இளைஞர் வலுவூட்டுகை , சமூக பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) அவர் இந்த அமைச்சுப் பதவிக்கு நியமிக்கப்பட்ட பின்னர் மேற்கொண்ட வெளிநாட்டு விஜயங்களின் எண்ணிக்கைகளும் அந்த நாடுகளும் யாவை என்பதையும்,

(ii) வெளிநாட்டு விஜயம் மேற்கொள்ளப்பட்டமைக்கான காரணம் மற்றும் உரிய காலப் பகுதி யாவை என்பதையும்,

(iii) கழித்த நாட்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்,

(iv) அவருடன் பங்கேற்ற உத்தியோகத்தர்கள் யாவர் என்பதையும்,

(v) அவர்களது பதவிகள் யாவை என்பதையும்,

(vi) அவருடன் வெளிநாடு சென்ற சகல உத்தியோகத்தர்களும் தற்போது மீண்டும் நாடு திரும்பியுள்ளனரா என்பதையும்,

(vii) எவரேனுமொருவர் மீண்டும் திரும்பிவரவில்லையெனில் ,அவர் யார் என்பதையும்,

(viii) அது எக்காரணத்தினால் என்பதையும்,

(ix) வெளிநாட்டு விஜயங்களை மேற்கொண்ட போது செலவிடப்பட்ட தொகை எவ்வளவு என்பதையும்,

(x) இத் தொகை அமைச்சுக்கான ஒதுக்கீடுகளிலிருந்து மேற்கொள்ளப்படாமல் வேறு வெளி நிறுவனத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டிருக்குமாயின் அந்த நிறுவனம் யாது என்பதையும்

தனித்தனியாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0552 / ' 08

9..

கௌரவ ரவி கருணாநாயக்க,— பெற்றோலியம், பெற்றோலிய வள அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் (CPC) உற்பத்தி செய்யப்படும் அல்லது இறக்குமதி செய்யப்படும் அனைத்து உற்பத்திப் பொருட்களையும்,

(ii) ஒவ்வொரு வித்தியாசமான பொருளினதும் விற்கும் விலையை அதன் இலாபம் நீங்கலாகவும் அதற்கான செலவுக்கூறுகளுடன்

அவர் இச்சபைக்கு அறியத்தருவாரா?

(ஆ) (i) கீழே கொடுக்கப்பட்டவாறான செலவுகளின் உருவாக்குவதற்கான அனைத்துக் கட்டங்களிலுமான அனைத்து வரிகளையும்

| | | |
|---|---|---|
| விற்கும் விலை | | xxxxxxxxxx |
| உற்பத்திச் செலவு | xxxxx | |
| நிர்வாகச் செலவு | xxxxx | |
| சந்தைப்படுத்தல் செலவு | xxxxx | |
| நிதிச் செலவு | xxxxx | |
| விளம்பரச் செலவு | xxxxx | xxxxxxxxxx |
| | | - - - - - - - - - |
| மொத்த இலாபம் | | xxxxxxxxxx |
| வரி நீங்கலாக | | |
| (வேறாகக் குறிப்பிட்ட அனைத்து வகைகளும்) | xxxxx | xxxxxxxxxx |
| | | - - - - - - - - - |
| தேறிய இலாபம் | | xxxxxxxxxx |

(ii) வருடாந்த அடிப்படையில் கடந்த 15 வருடங்களுக்கான இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினதும் அதன் துணை நிறுவனங்களினதும் இலாபத்தையும்

அவர் கூறுவாரா?

(இ) (i) இன்னும் ரூபாவுக்கு மாற்றப்படாது காசாக்கப்படாத டொலர்கள் மீதான வங்கிகளுக்கான மொத்த கடன்களினையும்,

(ii) நாணயப்பரிமாற்ற இழப்பினை யார் பொறுப்பேற்பார்கள் என்பதனையும்,

(iii) மேலே (அ)(i) இன் படி விற்கப்பட்ட மொத்த எண்ணிக்கையினை மொத்த நாணயப் பெறுமதியுடனும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0990 / '08

10.

கௌரவ பேமசிறி மானகே,— பெற்றோலியம், பெற்றோலிய வள அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—(2)

(அ) கடந்த ஓகத்து – செத்தெம்பர் மாதங்களில் உலக சந்தையில் எண்ணெய்ப் பீப்பாயொயன்றின் விலை குறைவடைந்ததென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) 2008 ஆம் ஆண்டு சனவரி மாதத்திலிருந்து 2008 ஆம் ஆண்டு ஒக்றோபர் மாதம் வரையிலான காலத்தில் உலக சந்தையில் எண்ணைய்ப் பீப்பாயொன்றின் விலைகள் எவ்விதத்தில் குறைவடைந்தன,

(ii) இந்நாட்டிற்கு வருகை தருகின்ற வெளிநாட்டுக் கப்பல்களுக்கு மற்றும் இந்நாட்டு நுகர்வோருக்கு ஒரு லீற்றர் டீசல் என்ன விலைக்கு விற்பனை செய்யப்படுகின்றது,

(iii) விமானங்களுக்கு என்ன விலைக்கு எரிபொருள் விற்பனை செய்யப்படுகின்றது,

(iv) உள்நாட்டு மீன்பிடிப் படகுகளுக்கு ஒரு லீற்றர் டீசல் என்ன விலைக்கு விற்பனை செய்யப்படுகின்றது

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) வெளிநாட்டுக் கப்பல்களுக்கு வழங்கப்படுகின்ற சலுகை உள்நாட்டு மீன்பிடிப் படகுகளுக்கு வழங்கப்படாமைக்கான காரணம் யாது என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1077 / '08

11.

கௌரவ ஜினதாச கிதுலகொட,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவுக்குச் சொந்தமான காணிகளின் உரிமையானது உடன்படிக்கைகளைச் செய்துகொள்ளாமலும் சட்டபூர்வமற்ற வகையிலும் ஒருசில நபர்களுக்கு கையளிக்கப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேலே குறிப்பட்ட காணிகள் கையளிக்கப்பட்ட அடிப்படை, கையளிக்கப் பட்டவர்கள் மற்றும் வழங்கப்பட்ட காணியின் அளவு ஆகியவற்றையும்,

(ii) இவ்விதமாக சட்டபூர்வ நடவடிக்கைமுறையின்றி கையளித்த உத்தியோகத் தர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடடிக்கைகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1153 / '08

12\.

கௌரவ லக்ஷ்மன் நிபுணஆரச்சி,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) 2008ஆம் ஆண்டு முறையே ஆகஸ்ட், செப்டம்பர், ஒக்டோபர் ஆகிய மூன்று மாதங்களில் இலங்கை மத்திய போக்குவரத்துச் சபை (ஸ்ரீ லங்கம) மாதாந்த பருவச் சீட்டுக்கள் மூலம் பெற்ற வருமானம் எவ்வளவு,

(ii) மேற்படி வருமானம் அம்மூன்று மாதங்களில் பயணிகள் போக்குவரத்தின் மூலம் ஸ்ரீ லங்கம பெற்ற மொத்த வருமானத்தின் என்ன சதவீதம்

என்பதை அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) (i) மாத ஆரம்பத்தில் பெறுகின்ற வருமானத்தை வங்கியில் வைப்பிலிடுவதன் மூலம் சம்பந்தப்பட்ட திணைக்களம் மேலதிக வட்டியை ஈட்டியுள்ளதா,

(ை) மேற் குறிப்பிட்ட மூன்று மாதங்களுக்குரிய அவ்வட்டிப்பணம் எவ்வளவு

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0556 / '08

13\.

கௌரவ ரவி கருணாநாயக்க,— நெடுஞ்சாலைகள், வீதி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) கிரிபத்கொடை மேம்பாலத்தை நிர்மாணிப்பதற்கான செலவு எவ்வளவு என்பதையும்,

(ii) முழுப்பாலத்தின் நீளமும் அதன் பரப்பளவு எத்தனை சதுர மீற்றர் என்பதையும்,

(iii) சாதாரண சீமெந்தினால் இக்கட்டமைப்புகள் கட்டப்பட்டிருக்குமாயின் அதற்கான செலவு எவ்வளவு என்பதையும்,

(iv) இதற்காக கேள்விப்பத்திரம் கோரப்பட்டதா என்பதையும்,

(v) ஆமெனில், கிடைக்கப்பெற்ற விலைகளை குறித்தனுப்பியவர்களது பெயர்கள் என்ன என்பதையும்

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(ஆ) (i) இம்மேம்பால நிர்மாணிப்பிற்கான நிதி எந்த மூலத்திலிருந்து கிடைத்தது என்பதையும்,

(ii) வட்டியுடன் சேர்த்து மொத்தச் செலவு எவ்வளவு என்பதையும்,

(iii) எவ்வளவு காலத்திற்கான கடன் என்பதையும்,

(iv) நிர்மாணிக்கப்படவுள்ள இத்தகைய மேம்பாலங்களின் எண்ணிக்கையையும் அவற்றின் அமைவிடங்களையும்,

(v) ஒரு பாலத்திற்கான செலவு, மொத்தச் செலவு, எந்த அடிப்படையில் நிதி கிடைக்கிறது என்பதையும்,

(vi) உள்ளூர் முகவர்கள் யார் என்பதையும், அவர்களுக்கு வழங்கப்பட்ட தரகுப் பணம் எவ்வளவு என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1012 / '08

14.

கௌரவ பேமசிறி மானகே,— கடற்றொழில், நீரக வளமூலங்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,—(2)

(அ) (i) 2000 ஆம் ஆண்டில் இருந்து இற்றைவரையான காலப்பகுதியில் வெளிநாடுகளில் கைது செய்யப்பட்ட இலங்கை மீனவர்களின் எண்ணிக்கை யாது:

(ii) இவர்களில் இன்னமும் சிறைவைக்கப்பட்டுள்ளோரின் எண்ணிக்கை யாது

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) தற்போது சிறைவைக்கப்பட்டுள்ள மீனவர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவை:

(ii) இவர்கள் சிறைவைக்கப்பட்டுள்ள நாடுகள் யாவை

ஆகிய விபரங்களை அவர் இச்சபைக்கு சமர்ப்பிப்பாரா ?

(இ) (i) சிறைவைக்கப்பட்டுள்ள மீனவர்களை விடுவித்துக்கொள்ள அரசாங்கம் தற்போது மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை :

(ii) சிறைவைக்கப்பட்டுள்ள மீனவர்களின் குடும்பத்தவர்களுக்கு அரசாங்கம் வழங்கியுள்ள நிவாரணங்கள் யாவை

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல் ஏன்?

1154 / '08

15.

கௌரவ லக்ஷ்மன் நிபுணஆரச்சி,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) 2008 ஆகஸ்ட், செப்டம்பர், ஒக்டோபர் ஆகிய மூன்று மாதங்களில் புகையிரத மாதாந்த பருவச் சீட்டுக்கள் மூலம் பெற்ற வருமானம் எவ்வளவு,

(ii) மேற்படி வருமானம் அம்மூன்று மாதங்களில் பயணிகள் போக்குவரத்தின் மூலம் புகையிரத திணைக்களம் பெற்ற மொத்த வருமானத்தின் என்ன சதவீதம்

என்பதை அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) (i) மாத ஆரம்பத்தில் பெறுகின்ற வருமானத்தை வங்கியில் வைப்பிலிடுவதன் மூலம் சம்பந்தப்பட்ட திணைக்களம் மேலதிக வட்டியை ஈட்டியுள்ளதா,

(ii) மேற் குறிப்பிட்ட மூன்று மாதங்களுக்குரிய அவ்வட்டிப்பணம் எவ்வளவு

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல் ஏன்?

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## பிரேரணை முன்னறிவித்தல்கள்

1.

பாராளுமன்றச் சபைமுதல்வர்,— பாராளுமன்ற அமர்வு,— 7 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினாலும் 2008.06.05 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணையினாலும் தடைபெறாமல் 2009 மாச்சு மாதம் 20 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சபை அமர்வு நேரம் மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 4.30 மணிவரை இருக்குமாக. பி.ப. 4.30 மணிக்கு சபாநாயகர் பாராளுமன்றத்தை வினாவின்றி ஒத்திவைப்பாராக.

2.

கௌரவ (வண) உடவத்தே நந்த தேரர்,— சட்டமூலம் கொண்டுவர அனுமதி (இல.1),— பின்வரும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக :-

"ஹங்குரான்கெத மாதென்வல ரஜ மகா விகாரை அபிவிருத்தி மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்"

3.

கௌரவ (வண) உடவத்தே நந்த தேரர்,— சட்டமூலம் கொண்டுவர அனுமதி (இல.2),— பின்வரும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக :-

"அத்தரகல்ல ஐக்கிய பிரஜைகளுக்கான அபிவிருத்தி அமைப்பைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்"

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*1.

விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத்திட்ட (ஆயுதந்தாங்கிய படைகள்) (திருத்தம்) சட்டமூலம்,— இரண்டாம் மதிப்பீடு

*2.

விதுரர்களினதும் அநாதைகளினதும் ஓய்வூதியத்திட்டம் (ஆயுதந்தாங்கிய படைகள்) (திருத்தம்) சட்டமூலம்,— இரண்டாம் மதிப்பீடு

*3.

வாழ்க்கைத் தொழில்சார் தற்காப்பு மற்றும் சுகாதாரத்திற்கான தேசிய நிறுவகம் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*4.

இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன வங்கி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*5.

இலங்கைப் பகிரங்கத் தொழில் முயற்சிகள் சீர்திருத்த ஆணைக்குழு (நீக்கச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*6.

குடியியல் வான்செலவு சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*7.

குற்றச் செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோருக்கும் சாட்சிகளுக்குமான உதவி மற்றும் பாதுகாப்பு சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூன் 17, 2008) [1].

*8.

ஆளுநர்களின் ஓய்வூதிய சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*9.

மிகைப்பொருள் திணிப்பெதிர்ப்பு மற்றும் எதிரீட்டுத் தீர்வைகள் சட்டமூலம்— விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (ஏப்பிறல் 04, 2006) [1].

*10.

வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூலை 18, 2006) [1].

*11.

செயலூக்கமற்ற சொத்துக்கள் (மீட்புச்) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூலை 18, 2006) [1].

*12

சூதாட்ட (விசேட ஏற்பாடு) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூலை 18, 2006) [1].

*13.

முற்பாதுகாப்பு வழிமுறைகள் சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (ஏப்பிறல் 04, 2006) [1].

*14.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.1),— 06/2006 ஆம் இலக்கமும் 2006.04.25 ஆம் திகதியும் கொண்ட பொது நிர்வாக சுற்றுநிருபத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக 2006.01.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பிரதம நீதியரசர், உயர் நீதிமன்ற நீதிபதிகள், மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர், மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள் ஆகியோருக்கான மாதாந்த சம்பளங்கள் பின்வருமாறு அமைய வேண்டுமென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 108(1) ஆம் உறுப்புரையின் கீழ் இந்தப் பாராளுமன்றத்தினால் இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.

| | |
|---|---|
| மாண்புமிகு பிரதம நீதியரசர் | ரூ.70,000.00 |
| | ரூ. 1,500.00 |
| உயர்நீதிமன்ற நீதிபதிகளும் மேன்முறையீட்டு | |
| நீதிமன்றத்தின் தலைவரும் | ரூ. 65,000.00 |
| மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள் | ரூ. 63,500.00 |

மேலும், உயர்நீதிமன்றத்தினதும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தினதும் நீதிபதிகளுக்குச் செலுத்தப்பட வேண்டிய சம்பளங்களாக 2004 செத்தெம்பர் மாதம் 09 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து நிறைவேற்றப்பட்ட சம்பளத்திட்டங்களுக்குப் பதிலாக,

இப்பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் சம்பளங்கள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டு மென இந்தப்பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*15.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.2),— 2008.07.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பிரதம நீதியரசர், உயர்நீதிமன்ற நீதிபதிகள், மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர், மேன்முறையீடு நீதிமன்ற நீதிபதிகள் ஆகியோருக்காக, சம்பளத்தின் 25% இற்குச்சமமான மாதாந்த ஆள்சார் படியொன்றைச் செலுத்துவதற்கு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 108(1) ஆம் உறுப்புரையின் கீழ் இந்தப்பாராளுமன்றத்தினால் இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.

மேலும், உயர்நீதிமன்றத்தினதும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தினதும் நீதிபதிகளுக்குச் செலுத்தப்பட வேண்டிய ஆள்சார் படிகளாக பாராளுமன்றத்தினால் 1998 மாச்சு மாதம் 17 ஆம் திகதி நிறைவேற்றப்பட்ட படிகளுக்குப் பதிலாக, இப்பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் ஆள்சார் படிகள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமென இப்பாராளு மன்றத்தினால் மேலும் தீர்மானிக்கப்படுகின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*16.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.3),— மேலும், 2007.08.01 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பிரதம நீதியரசரும் உயர்நீதிமன்ற நீதிபதிகளுக்கும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவருக்கும் மேன்முறையீடு நீதிமன்ற நீதிபதிகளுக்கும் கீழ்க்காணுமாறு மாதாந்த வீட்டு வாடகைப் படிகள் செலுத்தப்பட வேண்டுமென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 108(1) ஆம் உறுப்புரையின் இப்பாராளுமன்றத்தினால் மேலும் தீர்மானிக்கப்படுகின்றது.

| | |
|---|---|
| மாண்புமிகு பிரதம நீதியரசர் | ரூ. 27,500.00 |
| உயர்நீதிமன்ற நீதிபதிகள், மேன்முறையீட்டு நீதிபதிகளின் தலைவர் | ரூ. 25,000.00 |
| மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள் | ரூ. 22,500.00 |

மேலும், உயர் நீதிமன்றத்தினதும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தினதும் நீதிபதிகளுக்குச் செலுத்தப்பட வேண்டிய வீட்டு வாடகைப் படியாக 2004 செத்தெம்பர் மாதம் 09 ஆந் திகதி பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்ட படிக்குப் பதிலாக, இப்பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்ட வீட்டு வாடகைப் படி நடைமுறைப் படுத்தப்பட வேண்டுமெனவும் இப்பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்படுகின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*17.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.4),— 2008.07.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு, பிரதம நீதியரசருக்கு உபசரணைப் படியாக மாதாந்தம் ரூ. 3,500 படியொன்றைச் செலுத்துவதற்கு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 108(1) ஆம் உறுப்புரையின் கீழ் இப்பாராளுமன்றத்தினால் இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.

மேலும் இதற்கு முன்னர் பிரதம நீதியரசருக்காக பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்ட உபசரணைப் படிக்குப் பதிலாக, இப்பிரேரணையினால் தீர்மானிக்கப் படும் உபசரணைப் படி நடைமுறைப்படுத்தப்படவேண்டுமென இப்பாராளுமன்றத்தி னால் தீர்மானிக்கப்படுகின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*18.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் கீழ் கட்டளை,— (52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் 32 ஆம் பிரிவின் கீழ் மேன்மை தங்கிய சனாதிபதியினால் மதுவரி தொடர்பில் ஆக்கப்பட்டு 2008, ஏப்பிறல் மாதம் 10 ஆந் திகதிய 1544/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2008.06.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

*19.

மருத்துவக் கட்டளைச் சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகள்,— விவாதம் ஒத்திவைக்கப் பட்ட விடயம் (ஒற்றோபர் 03, 2006),— ``(105 ஆம் அத்தியாயமான) மருத்துவக் கட்டளைச் சட்டத்தின் 72 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 19 ஆம் பிரிவின் கீழ் சுகாதார நலத்துறை, போசணை அமைச்சரால் இலங்கை மருத்துவப் பேரவையுடன் கலந்தாலோசனை செய்து ஆக்கப்பட்டு 2006, ஓகத்து மாதம் 17 ஆம் திகதிய 1458/16 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2006.09.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக" எனப் பிரேரணை கொண்டு வரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

*20.

தபால், தொலைத்தொடர்புகள் அமைச்சர்,— அஞ்சல் அலுவலகக் கட்டளைச் சட்டத்தின் கீழ் விதி,— (190ஆம் அத்தியாயமான) அஞ்சல் அலுவலகக் கட்டளைச் சட்டத்தின் 12, 21, 25, 27, 81, 62, 06, 39, 49, 44, 68, 67, 40, 24, 59, 60, 35, 59, 67 மற்றும் 64ஆம் பிரிவுகளின் கீழ், அஞ்சல், தொலைத்தொடர்புகள் அமைச்சரால் நிதி அமைச்சரின் உடன்பாட்டுடன் ஆக்கப்பட்டு, 2007, ஏப்பிறல் மாதம் 25 ஆம் திகதிய 1494/10 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2007. 07. 17 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான விதி அங்கீகரிக்கப்படுமாக.

21.

அரசியலமைப்பிற்கான பத்தொன்பதாவது திருத்தச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

22.

வடக்கு மற்றும் கிழக்கு இரு மாகாணங்களையும் தற்காலிகமாக இணைத்திருப்பதை இரத்துச் செய்வதற்கான (விசேட பிரமாணங்கள்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

23.

ஸ்ரீ பாத கல்பவருசஷ்ஷ அபிவிருத்தி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

24.

நுகவெல புலமைப்பரிசு நம்பிக்கைப்பொறுப்பு நிதியம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் - இரண்டாம் மதிப்பீடு

25.

ஓலகங்கல மஹா சுதர்ஷன பரோபகாரி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

26.

பலாத்காரமாக மதம் மாற்றுவதைத் தடைசெய்தல் சட்டமூலம் — பரிசீலனை.

27.

பிபிலோமேனியா கல்வி நூல்களுக்கான தேசிய நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் - பரிசீலனை

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

---

[1] "சட்டமூலம் இப்பொழுது இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெறுமாக" எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.